**பேருவளை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவளை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் புத்தக மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பற்றாக்குறையான புத்தகங்களின் பெறுமதிகளை கணக்குகளிலிருந்து அகற்றும் போது மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டு நூலகப் புத்தகக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், புத்தகங்களை அகற்றும் கணக்கு வரவு வைக்கப்பட்டு நூலகப் புத்தகக் கணக்கு செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 46,906 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நூலகத்திலிருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நூலகப் புத்தக நன்கொடை ரூபா 99,300 ஆக இருந்த போதிலும், ரூபா 60,320 ஆக மூலதனமாக்கப்பட்டமையின் காரணமாக நூலகப் புத்தகங்கள் மற்றும் நன்கொடை என்பன ரூபா 38,980 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 229,518 பெறுமதியான நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட கழிவான ரூபா 46,546 தொகைக்காகவும் புத்தகங்கள் பெறப்பட்டமையினால் மொத்தப் பெறுமதியாக ரூபா 276,064 தொகை மூலதனமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 229,518 தொகை மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்குரியதாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் அகற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி பேரேட்டுக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 31,816,754 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 3,301,849 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் இன்மையினால் ரூபா 88,048,105 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிராணம் 371(2)(இ) | 1,276,043 | குறித்த பணிகளுக்காக வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2,129,151 | காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் என்பன தொடர்பாக தனிப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | - | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறையின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | இனங்காணப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2017 நவம்பர் 13 ஆந் திகதிய 1941ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி | - | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலாச் சபை அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டலொன்று, சிற்றுண்டிச்சாலை, தங்குமிடங்கள் என்பவற்றிற்கு அதற்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அந்த இடங்களின் பெறுகைகளிலிருந்து ஒரு சதவீதம் வரையான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று ஹோட்டல்களிலிருந்து அக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,574,806 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 42,076,220 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,267,400 | 15,289,634 | 14,821,687 | 18,372,695 | 15,267,168 | 15,267,168 | 21,035,937 | 17,904,747 |
| வாடகை | 7,457,200 | 7,457,175 | 6,725,425 | 1,502,150 | 7,457,175 | 7,457,175 | 8,582,075 | 809,100 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 160,000 | 192,750 | 170,000 | 22,750 | 129,750 | 129,750 | 121,750 | 8,000 |
| ஏனைய வருமானம் | 14,680,800 | 7,528,914 | 7,376,584 | 240,043 | 17,481,063 | 17,428,083 | 17,337,632 | 143,433 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 18,865,280 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 30,468,473 ஆகும். ஆண்டின் பெறுவனவுகள், பதிவழித்தல் மற்றும் சீராக்கல்கள் ரூபா 29,196,115 ஆக இருந்ததுடன் மொத்த நிலுவை வருமானம் ரூபா 20,137,638 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

**ஆதன வரி**

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு சபையின் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 17,904,747 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 7,596,975 தொகை அதாவது 42 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆதனவரி சிட்டையிடல் ரூபா 15,289,633 ஆக இருந்ததுடன், ஆண்டின் போது அதில் ரூபா 7,224,710 தொகை அதாவது 47 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) நிலுவை ஆதனவரி அறவிடல் மற்றும் நடப்பாண்டிற்குரிய ஆதனவரி அறவிடல் என்பன 50 சதவீதத்தை விட குறைவான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் ஒட்டுமொத்த அறவிடலின் முன்னேற்றம் 45 சதவீதமாகக் காணப்பட்டது.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2010 முதல் 2016 ஆம் ஆண்டுவரை வரி செலுத்தாது புறக்கணித்துள்ள 155 வியாபாரிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 244,935 தொகை ஆண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

சபை அதிகாரப்பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தப்படும் இடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நவீன சந்தையின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ள

43 முச்சக்கர வண்டிகளிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 251,652 கட்டணத்தில் ரூபா 32,000 தொகை 2018 செப்தெம்பர் 03 ஆந் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 193,450 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,933,198 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உபவிதி

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 157 ஆம் செயற்திட்டத்தின் கீழ் 15 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒரு விடயத்திற்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல் நடலடிக்கைத் திட்டத்தில் ஆண்டின் போது அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட வேலைகள் எதுவும் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 09 வேலைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்படாதிருந்ததுடன் திட்டத்திற்குப் புறம்பாக 20 செயற்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது.

#### (இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் ரூபா 33,110,818 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கோ அல்லது குறைத்துக் கொள்ளும் வகையில் தேவையான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. கழிவுப்பொருள் கிரயத்தை குறைப்பதற்குத் தேவையான கழிவுப்பொருள் வரி விதித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக்

கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், அவற்றைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் 03 நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அந்த நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறாமல் வியாபார நடவடிக்கைகளை செய்கின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம்**

(i) 2018 செப்தெம்பர் 03 இல் உள்ளவாறு சபையின் பதவியணியில் கணக்காளர் பதவி, இரண்டு முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், மூன்று வருமானப் பரிசோதகர் பதவிகள், ஒரு சேவைப் பரிசோதகர் பதவி, மூன்று சாரதி பதவிகள், ஒரு தச்சுவேலை பதவி, ஒரு மின் தொழில்நுட்பவியலாளர் பதவி, ஒரு பாதுகாவலர் பதவி மற்றும் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் என்ற பதவிகள் வெற்றிடாகக் காணப்பட்டன.

(ii) வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் முதலாம் வகுப்பின் ஒரு பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார்.

**(ஆ) ஊழியர் கடன்**

சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 86 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 141,127 தொகையான கடன் மீதி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 வாகனப் பயன்பாடு**

மோட்டார் வாகனப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்ட வாகன மெய்மையாய்வின் பிரகாரம் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடிய 13 வாகனங்கள் மற்றும் ஓட்டத்திற்குப் பொருத்தமற்ற 02 வாகனங்கள் என்பன இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதில் 03 வாகனங்கள் மாத்திரம் பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் ஓட்டத்திற்குப் பொருத்தமற்ற 02 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இனங்காணப்பட்ட நட்டம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வருடாந்த அறிக்கை தாமதமாக அனுப்பியதன் காரணமாக மிகைக் கட்டணமாக ரூபா 29,894 தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.6 பெறுகைகள்

### 3.6.1 வழங்கல் மற்றும் சேவைகள்

மீளாய்வாண்டிற்காக காகிதாகிகள் மற்றும் ஏனைய வழங்கல் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி செய்திப்பத்திரிகை அறிவித்தல் மூலம் வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அந்த செய்திப் பத்திரிப் பத்திரிகை அறிவித்தலின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் சகல வழங்கல்களும், நகர சபை அதிகாரப்பிரதேசத்தில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்குக் கொண்டுவந்து கையளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தும் அவ்வாறின்றி வழங்குனரிடம் நகர சபை உத்தியோகத்தர் சென்று பொருட்கள் கொள்வனவு செய்திருந்தமையின் காரணமாக அதற்கான போக்குவரத்து, எரிபொருள் மற்றும் உத்தியோகத்தர்களிற்கான மேலதிக நேரப்படி செலுத்துவதற்காக பொருட்களின் கிரயத்தை விட மேலதிகக் கிரயமொன்றை நிறுவனத்திற்குச் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

**நூலகக் கட்டிடத்தில் டைல் பதித்தல்**

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக கேள்வி கையளிக்கப்பட்ட தொகை ரூபா 517,974 ஆக இருந்த போதிலும், இறுதி விலைப் பட்டியலின் பிரகாரம் ரூபா 573,622 தொகை செலுத்தப்பட்டமையினால் ரூபா 55,648 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் இலக்கம் 02, 03 மற்றும் 04 என்ற வேலை விடயங்களின் இறுதிப் பட்டியலின் பிரகாரம் பெறுமதி முறையே 8.6, 540 மற்றும் 267 சதவீதம் என்ற அளவுகளில் மதிப்பீட்டை விஞ்சியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமமானம் 12 சதவீதம் முதல் 107 சதவீதம் வரையும், செலவினம் 17 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) இருப்பு மீதி சரியாக கணிப்பீடு செய்யப்படாமை |
| | (ii) இருப்புப் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | முறையான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | | (ii) | பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை. |
| (உ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | ஆண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |